உ

கடவுள் துணை.

பனைமர சோபனம்.



வே. ஜெயவேலு முதலியாரால்

சென்னை சூளை

பெரியநாயகியம்மன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

வே. ஜெயவேலு முதலியார்,
29, ஆரிமுத்துமேஸ்திரி தெரு, சூளை மதராஸ்.

நாலாயிர திவ்ய ப்ரபந்தம்.

ப்ரமபதத்தில் நிரதிசயாநந்தனாய் ஸ்ரீ பூமி நீளைகளோடு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான், உலகத்திற்ஜேன்றி நற்கதியடையும் மார்க்கம் காணாது வருந்தும் மானிடர்கள் உஜ்ஜீவிக்கவேண்டி ஸ்ரீ வத்ஸ கௌஸ்துப வைஜயந்தி வனமாலைகளையும், ஸ்ரீ பூமிநீளைகளையும், ஸ்ரீ பஞ்சாயுத ஆழ்வார்களையும், அநந்தகருட விஷ்வக்சேன பாப்ருதிகளையும் ஆழ்வார்களாக அவதாரம் செய்வித்து, அவர்களால் த்ராவிடவேத ரூபமாகிய இந்த திவ்யப் பிரபந்தங்களை வெளிவரச் செய்தாராதலால், பகவத் குணங்களை ஆஸ்ரயித்து பாராயணம் செய்ய இது மிகவும் அவசியமாயுள்ளது. இதில் பன்னிரு ஆழ்வாராசாரியர் களுடைய சரித்திரங்களும் அவர்களுடைய அழகிய திருவுருவப்படங்களும் அடங்கியிருக்கிறது. இதன் விலை ரூபா 4 0 0

மதனசேகரன்—இது ஓர் வேடிக்கையான நாவல். மணக்கோல மாப்பிள்ளை பிணக்கோலமான பரிதாபமும், காத்திருந்தமாதை பார்த்திருந்து கொண்டுபோனவன் சாமர்த்தியமும், சூழ்ச்சியும், சமயபேதமும், ஆலோசனையும், தைரியமும் மிகவும் புகழத்தக்கது. விலை அணா 0 8 0

உ

கடவுள் துணை.

பனைமரசோபனம்.

சோபனமடிசோபனமே சிவசோபனந்தமிப்பாட
அச்சோடிபெண்களா சோபனமேஅம்மாடி பெண்சளாசோபனமே
பனைமரமேபனைமரமே யேன்வளர்ந்தாய்பனைமரமே
நான்வளர்ந்தகாரியத்தை நாட்டாரேசொல்லுகிறேன்கேள்
அறியாவிட்டால்சொல்லுகிறேன்அச்சோடிபெண்களாசோபனமே
தெரியாவிட்டால்சொல்லுகிறேன் தேசமெங்கும்சோபனமே
பாராமரியாயிருக்காமல் பட்சமுடன்கேட்டிருப்பேன்
படுக்கப்பாய்நானுவேன் பாய்முடையதோப்பாவேன்
வெட்டநல்லவிறகாவேன் வீடுகட்டவாரையாவேன்
பட்டுப்போறபயிர்களுக்கு பலத்தநல்லவேத்தமாவேன்

அட்டடுக்குப்பெண்களுக்கு அடுப்பெரியமட்டையாவேன்
கட்டநல்லகயிறுவேன் கன்றுகட்ட தும்பாவேன்
மட்டமுள்ளவுரியாவேன் மாடுகட்ட தும்பாவேன்
பசுவணைக்குங்கயிராவேன் பால்தயிருக்குரியாவேன்
வாரவட்டைநானுவேன் வலச்சல்களுந்தானுவேன்
தொட்டிலுக்குகயிராவேன் துள்ளியாடவுஞ்சலாவேன்
கிணத்துஜலமொண்டுவரக் கைதாம்புக்கயிராவேன்
பலத்தசுமைபாண்டங்கட்குப் பிருமனையுந்தானுவேன்
ஏழைநல்லமங்கையர்க்கு யேற்றக்காதோலையாவேன்
மங்கிலியப்பெண்களுக்கு மஞ்சள்பெட்டிநானுவேன்
பாக்கியமுள்ளபெண்களுக்கு பாக்குப்பெட்டிநானுவேன்
விர்த்தாப்பியபெண்களுக்கு வெற்றிலைபெட்டிநானுவேன்
குணமுள்ளபெண்களுக்குக் குங்குமப்பெட்டிநானுவேன்
பெரியோர்கள்தோள்மேலே திருப்பக்கூடைநானுவேன்
திருப்பக்கூடைக்குள்ளிருக்குந் திருமண்பெட்டிநானுவேன்
திருப்பாவைசேவிப்போர்க்கு திருத்துழாய்ப்பெட்டிநானுவேன்
எழுதுகின்றபிள்ளைகட்கு யெழுத்தாணிகூண்டாவேன்
வாசிக்கின்றபிள்ளைகட்கு வண்ணநல்லதடுக்காவேன்

ஓதுகின்றபிள்ளைகட்கு ஓலைத்தடுக்காவேன்
நனைந்துவருவார்க்கு ஐம்பக்குடைநானாவேன்
பசித்துவருவார்க்கு பனம்பழமுநானாவேன்
களைத்துவருவார்க்கு கள்ளமுதம்நானாவேன்
பாலர்பெரியோர்க்குப் பனம்பதநீர்நானாவேன்
சித்திரைக்கோட்டையிலே சிறந்தநல்ல நுங்காவேன்
காளையர்க்குங்கன்னியர்க்குங் களைதீர்க்கும்விசிறியாவேன்
சண்டைப்பிள்ளைத்தாய்மார்க்குக் கற்பக்கட்டிநான்றருவேன்
கன்றீன்றமங்கையர்க்குக் கற்பக்கட்டியானாவேன்
வேலிகட்டகயிறுவேன் விறகுகட்டநாராவேன்
வருஷத்துக்கோர்தினத்தில் சரஸ்வதியம்மன்பூசைசெய்து
ஆமெழுகிகோலமிட்டு அச்சோடிபெண்களாசோபனமே
மனையலம்பிகோலமிட்டு மனைநிறையபுராணம்வைத்து
பூவும்புதுமலரும் பொன்னறுகும்அட்சதையும்
அட்சதையுமலரெடுத்து அர்ச்சிப்பாருலகமெல்லாம்
விஸ்தாரமாய்ரண்டாநாள் விஜயதசமியென்றுசொல்லி
நாட்டிலுள்ளபிள்ளைகட்கு நாள்பார்த்துமுகூர்த்தமிட்டு
எண்ணெய்தேய்த்துநீராட்டி யியல்புடனேயலங்கரித்து

மாலைபோட்டுசந்தனம்பூசி மடிநிறையபுஸ்தகம்வைத்து
மஞ்சள்படுத்துவர மங்களங்கள்பாடிவர
காம்புநறுக்கியவர் கணுக்காம்புவேராறுத்து
பக்கமிருபுறம்வாரி பல்வரிசைகாம்பரிந்து
என்னைத்திருத்தியவர் எழுத்தாணிகைபிடித்து
ஆணிப்பொன்னெழுத்தாணி அழகாகவேபிடித்து
வெள்ளிகட்டெழுத்தாணி வேடிக்கையாய்கைப்பிடித்து
ஆரியரும்வேதியரும் ஹரிநமோவென்றெழுதி
ஹரிஹரியென்றெழுதி அர்ச்சிப்பாரென்னையவர்
ஹரிச்சுவடியென்றாலே வரைக்காய்ப்பாடமென்றாலே
எண்சுவடியென்றாலே குழிமாற்றுமென்றாலே
தர்க்கங்களென்றாலே சாஸ்திரங்களென்றாலே
இராமாயணமென்றாலே பாரதமுமென்றாலே
பாகவதமென்றாலே பலசாஸ்திரங்களென்றாலே
திருவாய்மொழியென்றாலே திவ்யபிரபந்தமென்றாலே
நாலுவேதமுமென்றாலே ஆறுசாஸ்திரமென்றாலே
கங்கைக்கும்லங்கைக்கும் கீர்த்திமிகப்பெற்றிருப்பேன்
மங்கையர்க்குமன்னவர்க்கு மனமறிவதுமென்றாலே

வர்த்தகருஞ்செட்டிகளும் வழியறிவதுமென்றாலே
கணக்கர்களுமுதலிகளுங் கணக்கறிவதுமென்றாலே
பலசரக்குமண்டிகளில் பத்திரமாய்நானிருப்பேன்
காசிக்கடைசவளிக்கடையில் கருத்துடனேநானிருப்பேன்
கொடுக்கல்வாங்கலுள்ளவர்க்கு குறிப்புசொல்லிவாங்கிவைப்பேன்
கார்த்திகைமாதத்திலே கருத்தறிந்தபிள்ளைகட்கு
திருத்தமுள்ளமாபலியாய்த் தெருவெங்குஞ்சுற்றிடுவேன்
பட்சமுள்ளவாசலுக்குப் பட்டோலைநானாவேன்
காதத்துபெண்களுக்குக் காதோலைநானாவேன்
தூரத்துப்பெண்களுக்குத் தூதோலைநானாவேன்
கலியாணவாசலுக்குக் கட்டோலைநானாவேன்
சீமந்தவாசலுக்கு சீருடனேநான்போவேன்
பிள்ளைபிறந்ததென்றால் பெருமையுடன்நான்போவேன்
மைந்தன்பிறந்தானென்றால் மகிழ்ச்சியுடன்நான்போவேன்
அரண்மனையில்நானிருப்பேன் ஆஸ்தானத்தில்நானிருப்பேன்
மச்சுள்ளேநானிருப்பேன் மாளிகையில்நானிருப்பேன்
குச்சுள்ளேநானிருப்பேன் குடிசைகுள்ளேநானிருப்பேன்
எருமுட்டைகுதிரையெல்லாம் ஏந்திகொண்டுநானிருப்பேன்

ஏரிக்கரைமேலே யென்றனும்வீற்றிருப்பேன்
எமலோகம்போனாலு மெல்லார்க்குந்தெரியவைப்பேன்
சிவலோகம்போனவர்க்கு சீட்டோலையாயிருப்பேன்
சகலமானகாரியத்துக்கும் சாக்கிரதையாயிருப்பேன்
இத்தனைக்குமுதவியென்று என்னைஐய்யன்சிருஷ்டித்தான்
கற்பகவிருக்ஷமெனக் கைலாயிலுந்தானமர்ந்தேனை
திருப்பனையூர்தன்னிற் சிவன்புனைந்தானென்நாமம்
நான்வளர்ந்தசேதிதனை நலமுடனேகேட்டவரும்
பாடிப்படித்தவரும் பாங்குடனேகேட்டவரும்
சொல்லிப்படித்தவரும் சுகிர்தமுடன்கேட்டவரும்
அச்சிலடித்தவருப் அழகுசென்னையாள்பவரும்
ஆல்போலேதழைத்து ஆதிசிவன்போல்வாழ்வார்
ஊழியூழிகாலபட்டும் உலகுதனிலேயிருந்து
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தாரீஸ்வரனார்.

பனைமாசோபனம்

முற்றிற்று.